கோவை நகருக்குச் செல்லும் திருச்சி பாதை, அவினாசி பாதை இரண்டிலிருந்தும் பிரிந்து நகரைத் தொடாமலேயே நகர எல்லைக்கு வெளியே நெடுஞ்சாலைகளில் சேரும்படி பை-பாஸ் ரோடுகள் அமைத்திடும் செயற் குறிப்பு எதுவும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்? எப்போது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்திற்கான முழுச் செலவு rough estimate has been assessed at 157 லட்சம் ரூபாய். இந்தத் திட்டத்தைப் பொறுத்து லாண்ட் அக்விசிஷன் செய்ய 39.37 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள நிலைமையில் இந்தத் திட்டத்தை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்ற செயற் குறிப்புகள் இருக்கின்றன.

அரசு போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகள்

*469 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகளைச் செய்வதற்கு தனித் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அதன் தொழிலாளர்களுக்காக 116 குடியிருப்புகளைக் கட்டிக் கொண்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் போக்குவரத்துத் துறையில் இருக்கும்போது 116 வீடுகள் கட்டுவது மட்டுமே இப்போது பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குஜராத் மாநிலத்தில் இவர்களுக்காக 'ஓன் யுவர் ஹவுஸ்' என்ற ஸ்கீம் இருப்பது போல், இப்போது வீட்டுவசதி வாரியம் பலதிட்டங்களை நிறை வேற்றிக் கொண்டிருக்கும்போது போக்குவரத்து துறையிலுள்ள பல்லாயிரம் தொழிலாளர்களுக்கு சில ஆண்டுகளில் வீடுகள் கிடைக்கின்ற வகையில் பெரிய திட்டத்தை அமைச்சர் அவர்கள் உருவாக்குவார்களா ?

1972 மார்ச் 13]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசாங்கப் போக்குவரத்துத் துறை மூலமாக இந்தக் குடியிருப்புகள் தொழிலாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அண்மையில் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இதே கோரிக்கையை அரசுக்கு வைத்தார்கள். வீட்டுவசதி வாரியத் தலைவரோடு அரசு போக்குவரத்துத் துறை இயக்குநர் அவர்கள் கலந்து பேசி இப்போது வீட்டு வசதி வாரியமும், அதே போல் குடிசை மாற்று வாரியமும் கட்டுகின்ற குடியிருப்புகளில் அரசாங்கத் துறையில் இருக்கும் போக்கு வரத்துத் தொழிலாளர்களுக்குத் தனிச் சலுகைகளை அளிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் போக்குவரத்துத் துறைக்கு என்று நிலம் வாங்கி, அதிலே தனியாக வீடுகளைக் கட்டி போக்குவரத்துத் துறைக்குத் தரவும் வீட்டுவசதி வாரியம் ஒப்புக் கொண்டிருக்கிறது. இதன் அடிப்படையில் கிட்டத்தட்ட 950 மனுக்கள் தொழிலாளர்களிடமிருந்து பெறப்பட்டு, வீட்டுவசதி வாரியத் தலைவருக்கு இப்போது அனுப்பப் பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: கன்னியாகுமரி டிவிஷனில் எத்தனை வீடுகள் கட்டப் பட்டிருக்கின்றன? அங்குள்ள தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்னவாயிற்று?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நாகர்கோயிலில் ரூ. 3,60,000 மதிப்பீட்டுத் தொகையில் 36 டெனமென்ட்ஸ் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்போது அரசாங்கப் போக்குவரத்து நான்கு ரீஜன்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நான்கு ரீஜன்களிலுள்ள தலைமை அலுவலகங்களில் இருப்பவர்களுக்கு இம்மாதிரி தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: எல்லாத் தொழிலாளர்களுக்கும் வீடு வசதி செய்து தந்துவிட வேண்டுமென்ற அடிப்படையில் வீட்டுவசதி வாரியத் தலைவரையும், குடிசை மாற்று வாரியத் தலைவரையும் நானே நேரில் அழைத்து பேசி கூடிய சீக்கிரத்தில் ஒரு திட்டத்தை உருவாக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுப் பேருந்துப் பணிகள்

* 470 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலிருந்து திருச்சி, கோவை வழியாக கூடலூருக்கு பஸ் விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?